# நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் ரத்த தான முகாம்



■ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் ரத்ததான முகாம் துவக்க நிகழ்ச்சி நடந்தது.

மார்த்தாண்டம், மார்ச் 12–

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளையோர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் ரத்த தான முகாம் நடந்தது.

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் மாணவர் பேரவை இணைந்து ரத்த தான முகாம் நடத்தியது. முதல்வர் டாக்டர் ஷீலா கிறிஸ்டி தலைமை வகித்தார். மாணவர் பேரவை செயலாளர் ஜெபின் வரவேற்றார். தாளாளர் டாக்டர் பிரவீன் வாழ்த்தி பேசினார். மாவட்ட மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி டாக்டர் ராகேஷ் பேசினார்.

தொடர்ந்து தன்னார்வ தொண்டர்கள் ரத்த தானம் செய்தனர். மாணவர் பேரவை தலைவர் ஷிபு நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை இளையோர் செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலர் டாக்டர் ஜோஸ் பால் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.